**கவனிக்க.**- 2009.08.28 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1618 - 2009 සැප්තැම්බර් 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2009.09.03**

*1618 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1105 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வரராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில்' பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2009, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அமுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**வளிமண்டலவியல் திணைக்களம்**

*வளிமண்டலவியல் அவதானிகள்/தொடர்பாளர்கள் பதவிக்காக இலங்கை தொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2009*

## Competitive Examination for Recruitment of Meteorological Observers/ Communicators to the Training Grade of the Sri Lanka Technological Service - 2009

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் வளிமண்டலவியல் அவதானிகள்/ தொடர்பாளர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண்/பெண் இரு சாரரார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சையாணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் தகைமைகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகளில் திறமையை அடிப்படையாகக் கொண்டு தகவுடையோர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3. இப்போட்டிப் பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் 2010 சனவரி மாதத்தில் உபகுறிப்பு 01 இல் தரப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். பரீட்சை நிலையங்களுக்குப் போதுமானளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அந்நிலையம் இரத்துச்செய்யப்பட்டு அருகாமையிலுள்ள நிலையத்திற்கு பரீட்சார்த்திகள் வழிப்படுத்தப் படுவார்கள்.

பரீட்சை நிலையங்களின் பெயரும் இலக்கமும் "உப அட்டவணை 01" இல் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தில் சம்பந்தப்பட்ட தலைப்பின் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள குறிப்புரையின்படி பரீட்சை நிலையப் பெயரும் இலக்கமும் நிரப்பப்படல் வேண்டும். மொழி, மற்றும் பரீட்சை நிலைய மாற்றங்கள் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. **சேவைக்கு ஆட்சேர்ப்புமுறை.**- வெற்றிடங்கள் எண்ணிக்கையில் 90% வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்படுவதுடன் அப்பதவிகளுக்கான அரசாங்க வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் அல்லது பிரசித்த அறிவித்தலொன்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதன்மூலம் காட்டப்படுகின்ற திறமையை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 15/90 மற்றும் அதற்கு ஏற்புடையதாக வழங்கப்படக்கூடிய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையின் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகிறது.

5. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

5.1 **வெளிவாரி அபேட்சகர்கள்.**- ஒரே தடவையில் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் 3 பாடங்களில் பின்வருமாறு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(அ) பௌதீகவியல், தூயகணிதம் மற்றும் பிரயோக கணிதம்

அல்லது

(ஆ) பௌதீகவியல், தூயகணிதம் அல்லது பிரயோக கணிதம் அல்லது ஒருங்கிணைந்த கணிதபாடத்துடன் இரசாயன வியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகியவற்றில் ஏதாவதொன்று

அத்துடன்

இரு தடவைகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சா/த) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம். விஞ்ஞானம் ஆகியவற்றுடன் ஏதாவதொரு பாடத்தில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதியன்று விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5.3 விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

5.4 விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவர்களாகவும் சிறந்த தேகாரோக்கியமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5.5 எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதிக்கு முன்னர் பதவிக்கான எல்லாத் தகைமைகளையும் கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.**- இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஏ4 அளவிலான கடதாசியின் ஒரு பக்கத்தில் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் தமது கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2009.10.05 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால்மூலம் ''பணிப்பாளர் நாயகம், வளிமண்டலவியல் திணைக்களம், பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07'' என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டு மென்பதுடன் விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையில் இடதுபக்க மூலையில் "வளிமண்டலவியல் அவதானி/வளிமண்டல வியல் தொடர்பாளர் பதவி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் அல்லது முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவ துடன் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பப்பத்திரத்தின் புகைப்படப்பிரதியொன்றினை தன்வசம் வைத்துக்கொள்வது உகந்ததாகும்.

விண்ணப்பங்கள் தயாரிக்கும்பொழுது தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். இதற்கு

மேலதிகமாக சிங்கள மொழி விண்ணப்பங்கள் சிங்களத்திலும், தமிழ்மொழி விண்ணப்பங்கள் தமிழிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

7. பரீட்சை அனுமதி அட்டை, பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் பரீட்சை நேர அட்டவணை என்பன பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சார்த்திகள் தமது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதியட்டைகளை சமர்ப்பிக்கத் தவறுகின்ற எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் பரீட்சார்த்தியொருவர் பரீட்சையில் தோற்று வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். எவ்வாறிருப்பினும் பத்திரிகை அறிவித்தலின் பின் 2 அல்லது 3 நாட்களுள் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் விண்ணப்பப்படிவத்தினதும் பதிவுத்தபால் பற்றுச்சீட்டினதும் புகைப்படப்பிரதியுடன் வங்கியில் பணம் செலுத்தியமைக்கான அத்தாட்சிப்பத்திரம் மற்றும் கொழும்புக்கு வெளியில் வசிப்பவர்களாயின் தொலைநகல் இலக்கம் என்பவற்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த வேண்டுகோள் கடிதத்தின் புகைப்படப்பிரதியை தன்வசம் வைத்துக்கொள்ளல் உபயோகமானதாகும்.

8. எழுத்துமூலப் பரீட்சையின்போது ஆளடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சை ஆணை யாளரினால் அறிவிக்கப்பட்ட சட்டத்திட்டங்களுக்கு பரீட்சார்த்திகளும் செயற்படவேண்டும் இச்சட்டத்திட்டங்களில் எதையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர், பரீட்சை ஆணையாளரின் வழிகாட்டலுக்கமைவாகத் தண்டனைக்குள்ளாக நேரிடும்.

9. இவ்வறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி உரியவாறு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப் பரீட்சைக்காகத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படுகிறது. போட்டிப் பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படமாட்டாது. எழுத்துமூலப் பரீட்சையின்போது மேலான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையென தெரியவந்தால் அவர்கள் பதவி பெறுவதற்கு தகுதியற்றவர்களென கருதப்படுவார்கள்.

10. இவ்வறிவித்தலில் வெளியாகாத விடயங்கள் தொடர்பாகவும் பதவிகள் வழங்குதல் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்குரியதாகும்.

11. விண்ணப்பத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்கக் கல்லூரியொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, சட்டத்தரணி, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், வருடாந்தம் 2,37,060 ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்த ரொருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

12. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக மீளச் செலுத்தப்படாத ரூ. 300 வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் இலங்கை வங்கியின், டொரின்டன் சதுக்கக் கிளையின் இல. 70104537042678 என்ற கணக்கில் வரவு வைத்து எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழல்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்ளவும்.

13. **எழுத்துப் பரீட்சை**.- இப்போட்டிப் பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும். பரீட்சார்த்தியொருவர் பரீட்சையின்போது தோற்றுகின்ற எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். எழுத்து மூலப் பரீட்சை பின்வரும் இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாகவிருக்கும்.

(1) நுண்ணறிவுத் தேர்வுப் பரீட்சை
(2) தொழில்நுட்ப வினாத்தாள்

14. **பாடத்திட்டம்**.- (1) நுண்ணறிவுத் தேர்வுப் பரீட்சை.- (நேரம் : 1 மணித்தியாலம்)

மொத்தப் புள்ளிகள் 100.

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான நியாயம் காணும் திறனையும் தரப்படும் தகவல்களிலிருந்து நன்கு ஊகித்துணரும் ஆற்றலையும் தீர்மானமெடுப்பதில் உள்ள திறனையும் மதிப்பிடும் வகையிலான வினாக்களைக் கொண்டதாகும்.

(2) தொழில்நுட்ப வினாத்தாள்.- (நேரம் : 2 மணித்தியாலம்)

மொத்தப் புள்ளிகள் 100.

க. பொ. த. (உயர்தரம்) வரையான தரத்தில் பௌதீகவியல் சார்ந்த பரீட்சார்த்தியின் அறிவை அளவிடும் வகையிலான வினாக்களை உள்ளடக்கிய வினாத்தாள்.

15. **தெரிவு செய்யும் முறை**.- (1) தகைமை பெறுவதற்காக ஒரு பாடத்தில் 40% புள்ளிகள் அல்லது அதற்குமேல் பெறுறுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்தி களில் மேலான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து தகைமைகளைப் பரீட்சித்துப் பார்க்கப்படும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. மேற்படி 05 இன் கீழான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் பரீட்சையில் பாடங்கள் இரண்டிலும் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளுக்கு இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்திற்கு நியமனம் வழங்கப்படும்.

(2) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்ச்சியாக 10 வருடங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பிராந்திய வளிமண்டலவியல் அலுவலகங்களில் கண்டிப்பாகச் சேவைசெய்ய வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் வளிமண்டலவியல் திணைக்களத்தில் வளிமண்டலவியல் அவதானிகள், தொடர்பாளர் களுக்கான பத்து (10) வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் ஏனைய பிரமாணங்கள் அமுல்படுத்தும் அதேவேளையில் விண்ணப்பதாரிகள் தெரிவில் மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு முன்னுரிமை வழங்கப்படும். இந்த முன்னுரிமை கிடைப்பது, விண்ணப்பதாரி தனது விண்ணப்பப்பத்திரத்தில் தெரிவிக்கும் விருப்பத்திற்கு இணங்கவே.

16. **மருத்துவப் பரிசோதனை**.- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரர்கள் தான் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய தேகாரோக்கியம் உடையவரென எண்பிக்கும் பொருட்டு மருத்துவ பரிசோதனையொன்றுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் மருத்துவப் பரிசோதனையில் தகுதியற்றவரென தெரியவரும் பட்சத்தில் அவர்கள் தகைமையற்றவர்கள் எனக் கருதப்படுவர்.

17. **சம்பள அளவுத்திட்டம்**.- (6/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அது தொடர்பான சேர்க்கையின்படி) -

எம். என். 1 2006 ஏ-பயிற்சித்தரம்

திரட்டிய மாதாந்தச் சம்பளம் ரூ. 13,120 உடன் வருடாந்த சம்பள ஏற்றமான மாதாந்தம் ரூ. 145 உடன் ரூ. 13,265 வரை கூடும் மொத்தச் சம்பளம் பயிற்சித்தரத்திற்கு உரியதாகும்.

எம். என். 3 2006 ஏ - வகுப்பு II பீ, வகுப்பு II ஏ மற்றும் வகுப்பு I பதவி ரூ. 15,005 - 4 × 180 - 6 × 240 - 11 × 320 - 20 × 360 ரூ. 27,885 (மாதாந்தம்)

**குறிப்பு**.- இரு வருட காலப்பயிற்சியின் முடிவில் தகுதிகாண் பரீட்சைக்கு அமர்த்தப்பட்ட பின் பயிற்சித் தரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் வகுப்பு II பீ இற்கு உள்ளீர்க்கப்படுவார்கள்.

18. **சேவை நிபந்தனைகள்** :

18.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையது மாகும். நியமனம் 03 வருடகாலத்திற்கு தகுதிகாண் நிலையிலிருப்பதுடன் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்ப தாரிகள், விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியத்துக்குப் பங்களிப்பு நிதி செலுத்தல் வேண்டும்.

18.2 தெரிவு செய்யப்படுபவர்கள் தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் திணைக்களத்தின் கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள், அரசாங்கத்தினால் ஏற்கனவே வழங்கப் பட்டுள்ள மற்றும் காலத்துக்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கட்டளைகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கி யொழுகுதல் வேண்டும்.

18.3 அரச மொழி தவிர்ந்த வேறோர் மொழியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 ஆண்டிற்குள் அரசகரும மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். பரீட்சையில் தேர்ச்சிபெறத் தவறினால் அடுத்த சம்பள உயர்வு இடை நிறுத்தப்படும்.

18.4 பொதுநிர்வாக சுற்றறிக்கை 07/2007 இன் பிரகாரம் நியமனத்தின் பின் 5 வருட காலத்துள் இரண்டாவது அரசமொழியில் குறிப்பிட்ட வினைத்திறமையையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறின் அவர் அவசியமான தகுதி பெற்றுக்கொள்ளும் வரை சம்பள ஏற்றம் நிறுத்தப்படும்.

18.5 பகிரங்கசேவை ஆணைக்குழுவின் அதிவிசேட வர்த்தமானி இல. 1589/30 இல் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் உரித்துடையதாகும்.

18.6 **முக்கியம்** :

(i) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பயிற்சிக் காலத்தின் பின் 5 வருடங்களுக்கு திணைக்களத்தில் சேவை செய்தல் வேண்டும் என்றும் தவறின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கு ரூபா 1,25,000 சட்டரீதியான பணம் அவர் செலுத்த வேண்டுமென்றும், கடமைகளைப் பொறுப் பேற்கமுன் திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய இருவரினால் பிணைமுறி ஒன்றைச் செய்து கொள்ளல் வேண்டும்.

(ii) கடமை நேரங்கள் எப்போதும் பொதுவாக வேலை செய்யும் நேரங்கள் அல்ல என்பதுடன் இரவு, பகல் இரண்டிலும் சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினங்களிலும் வேலைசெய்ய வேண்டும். முறைமாற்று வேலை பதிவேடுகளின் படியும் கடமைகளைச் செய்ய நேரிடும்.

(iii) அவர்கள் தீவில் எந்தவொரு பாகத்திலும் கடமை புரிதல் வேண்டும்.

ஜி. பீ. சமரசிங்க,
பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்.

வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோகா மாவத்தை,
கொழும்பு 07,
2009.09.03.

**உப அட்டவணை - 01**

பரீட்சை நிலையங்களின் பெயரும் இலக்கமும்

| பரீட்சை நிலையத்தின் பெயர் | பரீட்சை நிலையத்தின் இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| குருநாகல் | 04 |
| அனுராதபுரம் | 05 |
| இரத்தினபுரி | 06 |
| பதுளை | 07 |
| யாழ்ப்பாணம் | 08 |
| வவுனியா | 09 |
| மட்டக்களப்பு | 10 |

பரீட்சை இல. [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வளிமண்டலவியல் திணைக்களம்**

வளிமண்டலவியல் அவதானிகள்/தொடர்பாளர்கள் பதவிக்காக
இலங்கை தொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்திற்கு
ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2009

**Competitive Examination for Recruitment of Meteorological Observers/ Communicators to the Training Grade of the Sri Lanka Technological Service - 2009**

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :-

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

*பரீட்சை அமர்விற்கு நீர் எதிர்பார்த்த பரீட்சை நிலையத்தின் பெயரும் இலக்கமும்

| நிலையத்தின் பெயர் | நிலைய இல. | |
|---|---|---|
| | | |

(வர்த்தமானி அறிவித்தலின் அனுபந்தம் 1 இன்படி)

*வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பிராந்திய வளி மண்டலவியல் அலுவலகங்களில் முதல் பத்து வருடங்களுக்குத் தொடர்ச்சியாக கடமை புரியச் சம்மதிக்கிறீரா?

ஆம் 1
இல்லை 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

1. (அ) முதலெழுத்துக்களைப் பின்னால் இட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
உதாரணம் :- SILVA, A. B. C.

(ஆ) முதலெழுத்துக்களைப் பின்னால் இட்டு முதலெழுத்துக் களுடன் பெயர்கள் (தமிழ்/சிங்களத்தில்) திரு./திருமதி/ செல்வி :----.

(இ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :----.
(தமிழில்/சிங்களத்தில்)

(ஈ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் ஆங்கிலத்தில் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்துக்களில் நிரப்பப்படல் வேண்டும்)

2. தேசிய அடையாள அட்டை இல. :-

3. பால் :- உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்
(ஆண் - 0, பெண்-1)

4. நிரந்தர முகவரி :----.
(அ) (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆ) ஆங்கிலத்தில் :
(ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில் நிரப்பப்படல் வேண்டும்)
(பரீட்சை அனுமதிப்பத்திரம் இவ்விலாசத்திற்கு அனுப்பப் படும்.)

(இ) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
(ஈ) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(உ) உமது தொலைபேசி இலக்கம் :----.

5. (அ) பிறந்த திகதி :-
ஆண்டு: மாதம்: திகதி :

(ஆ) 2009.10.05 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் : மாதங்கள் நாட்கள்

6. குடியியல் நிலைமை :
(விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

7. இனம் :
சிங்களம் - 1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, பிற - 5
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

8. கல்வித் தகைமைகள் :
(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

முதல் தடவை — ஆண்டு :----. சுட்டெண் :----.
இரண்டாம் தடவை — ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

9. தொழில் தகைமைகள்/தொழில்நுட்ப தகைமைகள் :
9.1 பெறப்பட்ட பட்டம்/டிப்ளோமா :----.
9.2 சம்பந்தப்பட்ட பட்டம்/டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் :----.
9.3 அப்பட்டம்/டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி :----.

10. பிற தகைமைகள் :----.

11. நீர் ஏதேனும் குற்றத்துக்காக நீதிமன்றில் தண்டனை பெற்றுள்ளீரா? ஆம்/இல்லை

11.1 ஆமெனில் விபரங்களைத் தருக :----.

12. விண்ணப்பதாரர் தற்பொழுது அரச அல்லது மாகாண அரச சேவையில் தொழில்புரிபவராயின் பதவிப்பெயரும், திணைக் களத்தின் பெயரும், முகவரியும் :----.

13. விண்ணப்பதாரர் இதற்கு முன்பு அரச/மாகாண அரச சேவையில் பணிபுரிந்து பின்னர் விலகியிருப்பவராயின் அவ்வாறு விலகுவதற்கான காரணம் :----.

14. பரீட்சைக்கட்டணம் செலுத்துதல் தொடர்பான தகவல்கள் :----.
14.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கியின் பெயர் :----.
14.2 பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
14.3 பணம் செலுத்திய திகதி :----.

(பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்ளவும்.)

15. **விண்ணப்பதாரரின் உறுதியுரை.-**

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்தவரை சரியானவை எனவும். உண்மையானவை எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்பரீட்சையின் நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனத் தெரியவந்தால் எனது விணணப்பத்தன்மையை இரத்துச் செய்வதற்கும் அல்லது நியமனம் பெற்றதன் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நானறிவேன், மேலும் இந்த பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு கீழ்ப்படிவேன் என்றும் உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

16. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.-**
இவ்விண்ணப்பப்பத்திரத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ........................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் ................. ஆந் திகதி என் முன்நிலையில் இதில் கையொப்பம் இட்டார் எனவு ம் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

| | |
|---|---|
| ----, | -----, |
| விண்ணப்பதாரரின் மாதிரிக் கையொப்பம். | கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும், அலுவலரின் கையொப்பம். |

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்பொழுது சேவையில் ஈடுபட்டிருப்பவராயின் பின்வரும் அத்தாட்சி திணைக்களத் தலைவரினால் செய்யப்படுதல் வேண்டும்.)

**அரச அல்லது மாகாண அரசதிணைக்களத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தல்**

மேலே விபரம் கொடுத்துள்ள திரு./திருமதி/செல்வி .................. ..................... என்பவர் ......................................... அலுவலகத்தில் சேவை செய்கின்றார் என்றும் இப்படிவத்தில் சமர்ப்பித்துள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதுமாகும் என்றும் அவர் ..................... இல் இருந்து ............ என்ற பதவி வகிக்கிறார் என்றும் அவருடைய வேலை திருப்திகரமானது என்றும் இவர் இந்நியமனத்துக்கு தெரிவாயின் இவர் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார்/விடுவிக்கப்பட மாட்டார் என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

9-102/1

---

**வளிமண்டலவியல் திணைக்களம்**

தொலைத்தொடர்புகள் மற்றும் ரேடார் தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பின் 'ஆ' பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2009

**Competitive Examination for the Recruitment of Telecommunication & Radar Technician - Class II Segment B of the Sri Lanka Technological Service - 2009**

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தொலைத்தொடர்புகள் மற்றும் ரேடார் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண்/பெண் இரு சாரார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் தகைமைகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகளில் திறமையை அடிப்படையாகக் கொண்டு தகவுடையோர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3. இப்போட்டிப் பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் 2010 சனவரி மாதத்தில் கொழும்பில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும்.

4. **சேவைக்கு ஆட்சேர்ப்புமுறை.-** வெற்றிடங்கள் எண்ணிக்கையில் 90% வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்படுவதுடன் அப்பதவிகளுக்கான அரசாங்க வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் அல்லது பிரசித்த அறிவித்தலொன்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதன்மூலம் காட்டப்படுகின்ற திறமையை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 15/90 மற்றும் அதற்கு ஏற்புடையதாக வழங்கப்படக்கூடிய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையின் II ஆம் தரத்தின் "ஆ" பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகிறது.

5. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

5.1 (i) மொறட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்

நுட்ப டிப்ளோமா (இலத்திரன் மற்றும் தொலைத் தொடர்புகளுடன்)

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் டிப்ளோமா (இலத்திரன் மற்றும் தொலைத் தொடர்புகளுடன்)

அல்லது

(iii) உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (இலத்திரன் மற்றும் தொலைத் தொடர்புகளுடன்)

அல்லது

(iv) திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா (இலத்திரன் மற்றும் தொலைத் தொடர்புகளுடன்)

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படு கின்ற பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியினை சித்தியடைதல் பற்றிய தொடர்பான சான்றிதழ் (இலத்திரன் மற்றும் தொலைத் தொடர்புகளுடன்)

அல்லது

(vi) மேற்குறித்த தொழில்நுட்ப தகைமைகளுக்கு சமமானதென இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பிற தகைமைகள்.

அத்துடன்

ஒரே தடவையில் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் 3 பாடங்களில் பின்வருமாறு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(அ) பௌதீகவியல், தூயகணிதம் மற்றும் பிரயோக கணிதம்

அல்லது

(ஆ) பௌதீகவியல், தூயகணிதம் அல்லது பிரயோக கணிதம் அல்லது ஒருங்கிணைந்த கணிதபாடத்துடன் இரசாயன வியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகியவற்றில் ஏதாவதொன்று

அத்துடன்

இரு தடவைகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சா/த) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றுடன் ஏதாவதொரு பாடத்தில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி யன்று விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்குக் குறையாதவர் களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடைய தாகாது.)

5.3 விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

5.4 விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவர்களாகவும் சிறந்த தேகாரோக்கியமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5.5 எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதிக்கு முன்னர் பதவிக்கான எல்லாத் தகைமைகளையும் கட்டாயமாகப் பூர்த்தி செய் திருத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஏ4 அளவிலான கடதாசியின் ஒரு பக்கத்தில் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் தமது கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2009.10.05 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வாறு பதிவுத் தபால்மூலம் "பணிப்பாளர் நாயகம், வளிமண்டலவியல் திணைக்களம், பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07" என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையில் இடதுபக்க மூலையில் "தொலைத்தொடர்புகள் மற்றும் றேடார் தொழில்நுட்பவியலாளர் பதவி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் அல்லது முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவ துடன் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பப் பத்திரத்தின் புகைப்படப் பிரதியொன்றினை தன்வசம் வைத்துக்கொள்வது உகந்ததாகும்.

விண்ணப்பங்கள் தயாரிக்கும்பொழுது தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக சிங்கள மொழி விண்ணப்பங்கள் சிங்களத்திலும், தமிழ்மொழி விண்ணப்பங்கள் தமிழிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

7. பரீட்சை அனுமதி அட்டை, பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் பரீட்சை நேர அட்டவணை என்பன பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக் கொண்ட அனுமதியட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதியட்டைகளை சமர்ப்பிக்கத் தவறுகின்ற எந்தவொரு விண்ணப்பதாரருக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

பரீட்சைக்கான அனுமதியட்டை வழங்கப்பட்டவுடன் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். எவ்வாறிருப்பினும் பத்திரிகை அறிவித்தலின் பின் 2 அல்லது 3 நாட்களுள் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் விண்ணப்பப்படிவத்தினதும் பதிவுத்தபால் பற்றுச்சீட்டினதும் புகைப்படப்பிரதியுடன் வங்கியில் பணம் செலுத்தியமைக்கான அத்தாட்சிப்பத்திரம் மற்றும் கொழும்புக்கு வெளியில் வசிப்பவர்களாயின் தொலைநகல் இலக்கம் என்பவற்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த வேண்டுகோள் கடிதத்தின் புகைப்படப்பிரதியை தன்வசம் வைத்துக்கொள்ளல் உபயோகமானதாகும்.

8. எழுத்துமூலப் பரீட்சையின்போது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சை ஆணையாளரினால் அறவிக்கப்பட்ட சட்டத்திட்டங்களுக்கு

பரீட்சார்த்திகளும் செயற்படவேண்டும் இச்சட்டத்திட்டங்களில் எதையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர், பரீட்சை ஆணையாளரின் வழிகாட்டலுக்கமைவாகத் தண்டனைக்குள்ளாக நேரிடும்.

9. இவ்வறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி உரியவாறு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப் பரீட்சைக்காகத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படுகிறது. போட்டிப் பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படமாட்டாது. எழுத்துமூலப் பரீட்சையின்போது மேலான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையென தெரியவந்தால் அவர்கள் பதவி பெறுவதற்கு தகுதியற்றவர்களென கருதப்படுவார்கள்.

10. இவ்வறிவித்தலில் வெளியாகாத விடயங்கள் தொடர்பாகவும் பதவிகள் வழங்குதல் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்குரியதாகும்.

11. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்கக் கல்லூரியொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, சட்டத்தரணி, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், வருடாந்தம் 237,060 ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்த ரொருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

12. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக மீளச் செலுத்தப்படாத ரூ. 300 வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் இலங்கை வங்கியின், டொரின்டன் சதுக்கக் கிளையின் இல. 70104537042678 என்ற கணக்கில் வரவு வைத்து எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளவும். பற்றுச்சீட்டின் நிழல்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்ளவும்.

13. **எழுத்துப் பரீட்சை**.- இப்போட்டிப் பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும். அபேட்சகர் ஒருவர் பரீட்சையின்போது தோற்றுகின்ற எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். எழுத்து மூலப் பரீட்சை பின்வரும் இரண்டு வினாப் பத்திரங்களைக் கொண்டதாகவிருக்கும்.

(1) நுண்ணறிவுத் தேர்வுப் பரீட்சை
(2) தொழில்நுட்ப வினாத்தாள்

14. **பாடத்திட்டம்**.-

(1) நுண்ணறிவுத் தேர்வுப் பரீட்சை.- (நேரம் : 1 மணித்தியாலம்)
மொத்தப் புள்ளிகள் 100.

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான நியாயம் காணும் திறனையும் தரப்படும் தகவல்களிலிருந்து நன்கு ஊகித்துணரும் ஆற்றலையும் தீர்மானமெடுப்பதில் உள்ள திறனையும் மதிப்பிடும் வகையிலான வினாக்களைக் கொண்டதாகும்.

(2) தொழில்நுட்ப வினாத்தாள்.- (நேரம் : 2 மணித்தியாலம்)
மொத்தப் புள்ளிகள் 100.

அடிப்படை மின்சார போதனாமுறை, பகுதியளவு கடத்திகள் எண்முறை, இலத்திரனியல் தரவு பரிவர்த்தனை தொடர்பாடல் முறை என்பவற்றின் கீழ் பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் தொடர்பான பரீட்சார்த்தியின் அறிவைக் கணிப்பீடு செய்வதற்கான வினாக்கள் அடங்கிய வினாத்தாள்.

15. **தெரிவு செய்யும் முறை**.- (தகைமை பெறுவதற்காக ஒரு பாடத்தில் 40% புள்ளிகள் அல்லது அதற்குமேல் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்தி களில் மேலான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து தகைமைகளைப் பரீட்சித்துப் பார்க்கப்படும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. மேற்படி 05 இன் கீழான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் பரீட்சையில் பாடங்கள் இரண்டிலும் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளுக்கு இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பின் 'ஆ' பிரிவிற்கு நியமனம் வழங்கப்படும்.

16. **மருத்துவப் பரிசோதனை**.- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தான் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய தேகாரோக்கியம் உடையவரென எண்பிக்கும் பொருட்டு மருத்துவ பரிசோதனையொன்றுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் மருத்துவப் பரிசோதனையில் தகுதியற்றவரென தெரியவரும் பட்சத்தில் அவர்கள் தகைமையற்றவர்கள் எனக் கருதப்படுவர்.

17. **சம்பள அளவுத்திட்டம்**.- (6/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அது தொடர்பான சேர்க்கையின்படி) :-

எம். என். 3 2006 ஏ - வகுப்பு II பீ, வகுப்பு II ஏ மற்றும் வகுப்பு I பதவி ரூ. 15,005 - 4 × 180 - 6 × 240 - 11 × 320 - 20 × 360 ரூ. 27,885 (மாதாந்தம்)

18. **சேவை நிபந்தனைகள்**:

18.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித் துடையதுமாகும். நியமனம் 03 வருடகாலத்திற்கு தகுதிகாண் நிலையிலிருப்பதுடன் தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்கள், விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியத்துக்குப் பங்களிப்பு நிதி செலுத்தல் வேண்டும்.

18.2 தெரிவு செய்யப்படுபவர்கள் தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் திணைக்களத்தின் கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள், அரசாங்கத்தினால் ஏற்கனவே வழங்கப் பட்டுள்ள மற்றும் காலத்துக்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கட்டளைகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

18.3 அரச மொழி தவிர்ந்த வேறோர் மொழியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 ஆண்டிற்குள் அரசகரும மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். பரீட்சையில் தேர்ச்சிபெறத் தவறினால் அடுத்த சம்பள உயர்வு இடைநிறுத்தப்படும்.

18.4 பொதுநிர்வாக சுற்றறிக்கை 07/2007 இன் பிரகாரம் நியமனத்தின் பின் 5 வருட காலத்துள் இரண்டாவது

அரசமொழியில் குறிப்பிட்ட வினைத்திறமையையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறின் அவர் அவசியமான தகுதி பெற்றுக்கொள்ளும் வரை சம்பள ஏற்றம் நிறுத்தப்படும்.

18.5 பகிரங்கசேவை ஆணைக்குழுவின் அதிவிசேட வர்த்தமானி இல. 1589/30 இல் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் உரித்துடையதாகும்.

18.6 முக்கியம் :

(i) கடமை நேரங்கள் எப்போதும் பொதுவாக வேலை செய்யும் நேரங்கள் அல்ல என்பதுடன் இரவு, பகல் இரண்டிலும் சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினங்களிலும் ஏற்படும் வேலை பதிவேடுகளின் படியும் கடமைகளைச் செய்ய நேரிடும்.

(ii) அவர்கள் தீவில் எந்தவொரு பாகத்திலும் கடமை புரிதல் வேண்டும்

ஜி. பீ. சமரசிங்க,
பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்.

வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோகா மாவத்தை,
கொழும்பு - 07,
2009.09.03 ஆந் திகதி.

பரீட்சை இல. ☐

(அலுவலக உபயோகத்திற்கு)

**வளிமண்டலவியல் திணைக்களம்**

தொலைத்தொடர்புகள் மற்றும் ரேடார் தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் பிரிவின் 'ஆ' பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2009

## Competitive Examination for the Recruitment of Telecommunication & Radar Technician - Class II Segment B of the Sri Lanka Technological Service - 2009

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

01. (அ) முதலெழுத்துக்களைப் பின்னால் இட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் :----.
(ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்)
உதாரணம் :- SILVA, A. B. C.

(ஆ) முதலெழுத்துக்களைப் பின்னால் இட்டு முதலெழுத்துக் களுடன் பெயர்கள் (தமிழ்/சிங்களத்தில்) திரு/திருமதி/செல்வி :----.

(இ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :----.
(தமிழ்/சிங்களத்தில்)

(ஈ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் ஆங்கிலத்தில் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்துக்களில் நிரப்பப்படல் வேண்டும்)

02 தேசிய அடையாள அட்டை இல. :----.

03. பால் :-
உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்
(ஆண் - 0, பெண்-1)

04. நிரந்தர முகவரி :----.
(அ) (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆ) ஆங்கிலத்தில் :
(ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில் நிரப்பப்படல் வேண்டும்)
(பரீட்சை அனுமதிப்பத்திரம் இவ்விலாசத்திற்கு அனுப்பப் படும்.)
(இ) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
(ஈ) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(உ) உமது தொலைபேசி இலக்கம் :----.

05. (அ) பிறந்த திகதி :-
வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ஆ) 2009.10.05 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் : ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

06. குடியியல் நிலைமை :
(விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

07. இனம் :
சிங்களம் - 1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, பிற - 5
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

08. கல்வித் தகைமைகள் :
(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை

முதல் தடவை
ஆண்டு :----.
சுட்டெண் :----.

இரண்டாம் தடவை
ஆண்டு :----.
சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை

ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

09. தொழில் தகைமைகள்/தொழில்நுட்ப தகைமைகள் :

9.1 பெறப்பட்ட பட்டம்/டிப்ளோமா :----.

9.2 சம்பந்தப்பட்ட பட்டம்/டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் :----.

9.3 அப்பட்டம்/டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி :----.

10. பிற தகைமைகள் :----.

11. நீர் ஏதேனும் குற்றத்துக்காக நீதிமன்றில் தண்டனை பெற்றுள்ளீரா? ஆம்/இல்லை

11.1 ஆமெனில் விபரங்களைத் தருக.

12. விண்ணப்பதாரர் தற்பொழுது அரச அல்லது மாகாண அரச சேவையில் தொழில்புரிபவராயின் பதவிப்பெயரும், திணைக் களத்தின் பெயரும், முகவரியும் :----.

13. விண்ணப்பதாரர் இதற்கு முன்பு அரச/மாகாண அரசசேவையில் பணிபுரிந்து பின்னர் விலகியிருப்பவராயின் அவ்வாறு விலகுவதற்கான காரணம் :----.

14. பரீட்சைக்கட்டணம் செலுத்துதல் தொடர்பான தகவல்கள் :----.

14.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கியின் பெயர் :----.

14.2 பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

14.3 பணம் செலுத்திய திகதி :----.

(பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்ளவும்.)

15. **விண்ணப்பதாரரின் உறுதியுரை.-**

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்தவரை சரியானவை எனவும். உண்மையானவை எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்பரீட்சையின் நிபந்தனைக ளின்படி நான் தகுதியற்றவரெனத் தெரியவந்தால் எனது விண்ணப்பத் தன்மையை இரத்துச் செய்வதற்கும் அல்லது நியமனம் பெற்றதன் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நானறிவேன், மேலும் இந்த பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு கீழ்ப்படிவேன் என்றும் உறுதியளிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

16. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.-**

இவ்விண்ணப்பப்பத்திரத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ........................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் அவர் ................ ஆந் திகதி என் முன்நிலையில் இதில் கையொப்பம் இட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் மாதிரிக் கையொப்பம்.

-----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும், அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.
அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

(அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்பொழுது சேவையில் ஈடுபட்டிருப்பவராயின் பின்வரும் அத்தாட்சி திணைக்களத் தலைவரினால் செய்யப்படுதல் வேண்டும்.)

**அரச அல்லது மாகாண அரச திணைக்களத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தல்**

மேலே விபரம் கொடுத்துள்ள திரு./திருமதி/செல்வி .................. ..................... என்பவர் ......................................... அலுவலகத்தில் சேவை செய்கின்றார் என்றும் இப்படிவத்தில் சமர்ப்பித்துள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதுமாகும் என்றும் அவர் ..................... இல் இருந்து ............ என்ற பதவி வசிக்கிறார் என்றும் அவருடைய வேலை திருப்திரகமானது என்றும் இவர் இந் நியமனத்துக்கு தெரிவாயின் இவர் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார்/விடுவிக்கப்பட மாட்டார் என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

9-102/2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2009 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை - 2009**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வியாழன் | 03.09.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2009 |
| | | வெள்ளி | 11.09.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2009 |
| | | வெள்ளி | 18.09.2009 | .. | நண்பகல் 12 | வியாழன் | 03.09.2009 |
| | | வெள்ளி | 25.09.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2009 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 02.10.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.09.2009 |
| | | வெள்ளி | 09.10.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.09.2009 |
| | | வெள்ளி | 16.10.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.10.2009 |
| | | வெள்ளி | 23.10.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.10.2009 |
| | | வெள்ளி | 30.10.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.10.2009 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 06.11.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.10.2009 |
| | | வெள்ளி | 13.11.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.10.2009 |
| | | வெள்ளி | 20.11.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.11.2009 |
| | | வெள்ளி | 27.11.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.11.2009 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.